
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1092

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

41

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# ஓ.பி.சி. இட ஒதுக்கீடு! தெரிந்தே செய்யப்பட்ட அநீதி!




மண்டல் ஆணைய பரிந்துரை அடிப் படையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இடஒதுக்கீட்டினைச் செயல்படுத்த, அன்றைய பிரதமர் வி.பி.சிங் முடிவுசெய்தார். அதற்கெதிராக ரத யாத்திரை சென்றவர்கள்தான் பா.ஜ.க.வினர். ஆட்சி கலைந்தாலும் பரவாயில்லை என அதை நிறைவேற்றினார் வி.பி.சிங். அப்படி, இட ஒதுக்கீட்டுக்கு எதிராக வடமாநிலங்களில் பெரும் கலவரங்களை நிகழ்த்தியவர்கள் கைகளில், ஒன்றிய ஆட்சி அதிகாரம் சென்றால் என்ன நடக்கும் என்பதற்கு மருத்துவக் கல்வி இடஒதுக்கீடும் சட்டப்போராட்டமும் சாட்சியாகும்.

2015-ஆம் ஆண்டில், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த மருத்துவர் சலோனி குமாரி என்பவர் ஒரு வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கில், மருத்துவக் கல்விக்கான அனைத்திந்தியத் தொகுப்பிற்கு உத்தரப்பிரதேசம் வழங்கும் இடங்களில் ஒன்றிய அரசின் இடஒதுக்கீட்டுச் சட்டத்தின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

அந்த வழக்கில், அப்போதே ஒன்றிய அரசு தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்க பா.ஜ.க. அரசுக்கு மனமில்லை. குறிப்பாக, சமூக நீதிக்கு ஆதரவாக நிற்க அவர்களுக்கு விருப்பமில்லை என்பதே வழக்கின் வாதங்களாக இருந்தன. காலங்காலமாக சமூக நீதியை எதிர்ப்பவர்களிடம் சமூக நீதியை எதிர்பார்க்க முடியுமா?

அன்றே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு வழங்கும் கொள்கை நிலைப்பாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுத்திருந்தால், அப்போதே இப்பிரச்சினை முடிந்திருக்கும். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மருத்துவ மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால், அதை சிக்கலானதாக மாற்றியது பா.ஜ.க. அரசு.

அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் சங்கம் தொகுத்த ஒரு தகவலின்படி, 2017-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரை நியாயமாகக் கிடைத்திருக்க வேண்டிய மருத்துவக் கல்வி இடங்கள் 11,027. ஆனால், 27 சதவிகித இட ஒதுக்கீட்டு உரிமையின்படி, ஓர் இடம்கூட மருத்துவ மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த அநீதியைத் தெரிந்தே செய்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

### ஒருமித்த குரல்

இதன் தீவிரத்தை உணர்ந்துதான் நம் தலைவர் அவர்கள், நாடாளுமன்றத்தில் 2019-ஆம் ஆண்டில் மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்களின்வழி உரிமை முழக்கத்தைத் தொடங்கி வைத்தார். நாடாளுமன்றத்தின்வழி தீர்க்க முடியாத நிலையில், மருத்துவக் கல்வி அனைத்திந்திய தொகுப்பில் மாணவர் சேர்க்கை குறித்து வெள்ளையறிக்கை வெளியிட வலியுறுத்தி, பிரதமருக்குக் கடிதம் எழுதினார். எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் இந்த அநீதிக்குக் குரல்கொடுக்க வேண்டும் என ஆதரவு திரட்டினார்.

இந்தத் தொடர் அழுத்தங்களுக்கு ஒன்றிய அரசு அடிபணியாத நிலையில், 2020-ஆம் ஆண்டு, கழகம், முதல்கட்சியாக உச்ச நீதிமன்றத்தின் கதவைத் தட்டியது. தவிர, சமூக நீதிப் போரில் அனைவரும் இணைய வேண்டும் என கூட்டணிக் கட்சிகளிடம் வேண்டுகோள் வைத்தது. அந்த வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி நாகேஸ்வர ராவ் அமர்வு, உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் பரிந்துரை செய்தது.

இதற்கிடையே, சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.மு.கழகம், திராவிடர் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் 2019-ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தன. புதுச்சேரி மாநிலத்திலும், அம்மாநில அரசு உள்பட 13 பேர் தனித்தனியாக வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதி சுப்பையா தலைமையிலான அமர்வு, உச்ச நீதிமன்றத்தில் உள்ள சலோனி வழக்கு முடிந்ததும் இந்த வழக்குகளை விசாரிக்கிறோம் என ஒத்தி வைத்தது. ஒன்றிய அரசின் சார்பில், 'இந்த வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது' என வாதம் வைக்கப்பட்டது. அதையடுத்து, மீண்டும் உச்ச நீதிமன்றம் சென்றது கழகம்.

உயர் நீதிமன்ற நீதிபதி சுப்பையா அளித்த தீர்ப்பினை ரத்து செய்த உச்ச நீதிமன்றம், இந்த வழக்கினை சென்னை உயர் நீதிமன்றம் விசாரிக்கலாம் என மீண்டும் உத்தரவு அளித்தது. குறிப்பாக, விரைவாக வழக்கை முடித்து தீர்ப்பளிக்குமாறு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

சென்னை உயர் நீதிமன்றத்தில், அப்போதைய தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அமர்வு, இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாகக் குழு அமைத்து முடிவு எடுக்குமாறு ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டது. இந்த வழக்கில் இது முக்கியமான நகர்வு எனலாம். குறிப்பாக, கழகம் உறுதியாக நின்று சட்ட வாதங்களின்வழி பெற்ற முதல்கட்ட வெற்றியாக இது அமைந்தது.

ஆனால், இந்தப் பிரச்சினை சட்ட வாதங்களின்வழி மட்டும் தீர்க்கப்படும் பிரச்சினை அல்ல; மக்கள் மன்றத்திலும் பேசப்பட வேண்டிய பிரச்சினை என நினைத்த நம் கழகத் தலைவர் அவர்கள், அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் எழுதினார். ஆனால், கழகம் பெற்ற வெற்றியைப் பொறுத்துக்கொள்ள முடியாத அன்றைய அ.தி.மு.க. அரசு, உயர் நீதிமன்றம் வழங்கிய முதல்கட்ட வெற்றிக்கு எதிராக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடுக்குச் சென்றது. உண்மையிலேயே இது ஒரு உள்ளடி குளறுபடி வேலை. அந்தக் குளறுபடியைச் சரிசெய்யவும் கழகமே தலைகொடுத்தது.


...தொடரும்

> நியாயமாகக் கிடைத்திருக்க வேண்டிய மருத்துவக் கல்வி இடங்கள் 11,027. ஆனால், 27 சதவிகித இட ஒதுக்கீட்டு உரிமையின்படி, ஓர் இடம்கூட மருத்துவ மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த அநீதியைத் தெரிந்தே செய்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

### OBC இடஒதுக்கீடு விவகாரத்தில் தி.மு.க. மேற்கொண்ட தொடர் முயற்சிகள்!

- 26.07.2019 – OBC இடஒதுக்கீடு குறித்து மாநிலங்களவையில் பி.வில்சன் எம்.பி. பேச்சு.
- 01.11.2019 – OBC இடஒதுக்கீடு தொடர்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷவர்தனுக்கு கடிதம்.
- 21.11.2019 – OBC இடஒதுக்கீடு குறித்து விவாதிக்க தி.மு.க. சார்பில் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ்
- 22.11.2019 – எம்.பி.பி.எஸ். ஓ.பி.சி. இட ஒதுக்கீடு: மோடி வெள்ளை அறிக்கை வெளியிட தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்.
- 06.12.2019 – OBC இட ஒதுக்கீடு பிரச்சினை குறித்து மாநிலங்களவையில் பி.வில்சன் எம்.பி. பேச்சு
- 09.12.2019 – OBC இடஒதுக்கீடு பிரச்சினை குறித்து மாநிலங்களவையில் திருச்சி சிவா எம்.பி. பேச்சு
- 06.01.2020 – OBC இடஒதுக்கீடு பிரச்சினை தொடர்பான கடிதத்துடன் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷவர்தனை தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் நேரில் சந்திப்பு.
- 15.05.2020 – OBC இடஒதுக்கீடு விவகாரத்தில் மத்திய அரசு சரியான பதில் அளிக்கவில்லை என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டன அறிக்கை.
- 27.05.2020 – மருத்துவப் படிப்பில் சமூகநீதி பின்பற்றப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி தி.மு.க. தலைவர் கண்டனம்.
- 28.05.2020 – அகில இந்திய மருத்துவப் படிப்பில் OBC இடஒதுக்கீடு பின்பற்றவில்லை என உச்சநீதிமன்றத்தை நாடியது திமுக.
- 31.05.2020 – மருத்துவப் படிப்புகளில் OBC இடஒதுக்கீட்டை உள்நோக்கத்துடன் மறுத்துவரும் மத்திய அரசைக் கண்டித்து காணொலியில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றம்.
- 11.6.2020 – OBC இடஒதுக்கீடு தொடர்பான வழக்கில் தி.மு.க. வழக்கறிஞர் பி.வில்சன் உச்சநீதிமன்றத்தில் தனது வாதத்தை எடுத்து வைத்தார். இதில் உயர்நீதி மன்றத்தை நாடுமாறு நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.
- 12.06.2020 – சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. வழக்கு.
- 19.6.2020 – மருத்துவ மாணவர் சேர்க்கையில் OBC மாணவர்களுக்கு 27% இடஒதுக்கீடு வழங்குவதாக உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- 19.6.2020 – இது முதல்கட்ட வெற்றியே. OBC மாணவர்களுக்கு 50% இடஒதுக்கீடு பெற தி.மு.க. தொடர்ந்து போராடும் – தலைவர் மு.க.ஸ்டாலின்.

## ஆங்கிலத்தில், 'நமக்கு ஏன் இந்த இழிநிலை?' நூல்!




1920-கள் முதல் 1970-களின் முற்பகுதி வரையிலான கால கட்டத்தில், பல்வேறு சாதிச் சங்க மாநாடுகளில் கலந்துகொண்டு பெரியார் ஆற்றிய உரையை, 'நமக்கு ஏன் இந்த இழிநிலை' என்ற தலைப்பில், நூலாகத் தொகுத்துள்ளார் வீ.எம்.எஸ்.சுபகுணராஜன். நாடார் சங்க மாநாடுகள், செங்குந்தர் மாநாடுகள், வன்னியர் சங்க மாநாடுகள், பிற பார்ப்பனரல்லாத சாதிகளின் மாநாடுகள் எனப் பல சாதிச் சங்க மாநாடுகளில் பெரியார் பேசியிருந்தாலும், பெரியார் பங்கேற்ற சாதிச் சங்க மாநாடுகளில் சரிபாதி ஆதி திராவிடர் மாநாடுகளே.

சாதி ஒழிய வேண்டுமென்று பேசுகிற பெரியார், சாதிச் சங்க மாநாடுகளில் பேசியது முரண்பாடாகத் தோன்றினாலும், அது முரண்பாடானது அல்ல. உரிமைகளைப் பெறுவதற்காக சாதியரீதியாகத் திரண்டாலும் இறுதியில் சாதி ஒழிப்பை நோக்கியே செல்ல வேண்டும், சாதியால் எந்த பெருமையும் இல்லை என்று ஒவ்வொரு கூட்டத்திலும் முன்வைத்த பெரியார், இடைநிலை சாதிச்சங்கங்களில் 'பார்ப்பனரால் ஒடுக்கப்படும் நீங்கள், சாதியப்படிநிலையில் உங்களுக்கு கீழ் உள்ள சாதியினரை ஒருபோதும் ஒடுக்கக்கூடாது' என்பதையும் தொடர்ந்து வலியுறுத்தினார்..

சாதி அதிகாரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதையும், அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பதையும் புரிந்துகொள்ள விரும்பும் எவருக்கும், ஒரு கையேடாகத் திகழும் இந்நூல் 'Caste And The Crisis Of Dignity Periyar E.V. Ramasamy Speaks: At Caste Association Meetings And Caste Abolition Conferences' என்ற தலைப்பில், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மூத்த பத்திரிகையாளர் ஆர்.விஜயசங்கர் மொழிபெயர்த்த இந்நூலானது, இன்று (28.01.2026) மாலை 5.30 மணிக்கு அண்ணா நூற்றாண்டு நூலக கருத்தரங்கக் கூடத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் வெளியிடப்படுகிறது. கழக மகளிர் அணி சமூக ஊடகப் பொறுப்பாளர் யாழினி, ஆய்வாளர் புலரி மீரா பாஸ்கர், பேராசிரியர் எஸ்.ஆனந்தி ஆகியோர் நூல் குறித்து திறனாய்வு செய்கின்றனர்.

வாய்ப்புள்ளோர் செல்க...

## ஃப்ளாஷ்பேக்





துரை பிரகாசம்

### செயல்தலைவராக கழகத் தலைவர்...

2017-ஆம் ஆண்டு, இன்றைய கழகத் தலைவர் அவர்கள், செயல் தலைவராகப் பொறுப்பேற்றபோது, அவரது இல்லத்தில் தொண்டர்களைச் சந்தித்தார். அப்போது தலைவரைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்து, புகைப்படம் எடுத்து மகிழ்ந்தேன். 27 ஆண்டுகளாக பகுதிப் பிரதிநிதியாக கழகப் பணியாற்றி வருகிறேன். இந்தப் புகைப்படம், முக்கியமான நாளொன்றின் அடையாளம் என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

– துரை பிரகாசம், 71-வது வட்டம், பகுதிப் பிரதிநிதி, திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி, சென்னை கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### முகவை மாவட்டத்தில் அறப்போர்!

6.9.1964-இல் இராமநாதபுரம் மாவட்டத்தில், இந்தி எதிர்ப்பு அறப்போரின் முதற்கட்டமாக 9 இடங்களில் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவுக்குத் தீ மூட்டப்பட்டது. மாவட்டச் செயலாளர் எஸ்.எஸ்.தென்னரசு, உ.பில்லப்பன், மாங்குடி மதியழகன், வி.மலைக்கண்ணன், ச.மாரிமுத்து, இரா.சின்னசாமி, வரதராசன், தங்கையா ஆகியோர் கைதாகினர். அடுத்த ஒரு வாரத்தில் மீண்டும் ஒன்பது இடங்களில் மறியல் நடைபெற்றது. 135 பேர் கைதாகினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131